முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 100/2024

அ.சா.3

2026–ம் ஆண்டு ஜுலை 21–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –3 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேன்மொழி | தொழில் | |
| கணவர் பெயர் | பெரியான் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.20 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar, A3)Mathiyalagan are present. Advocate Mrs.Arunadevi present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம்.ஓலைப்பட்டி காட்டுவளவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி. அ.சா.2 எனது தம்பியின் மனைவி. ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி நான் எனது அம்மா வீட்டிற்கு வந்திருந்தேன். அப்போது மாலை 06.00 – 06.30 மணியளவில் சடையன் வீட்டருகே உள்ள சின்ன பாட்டி வீட்டருகே நானும், எனது தம்பி ஞானசேகரன், அவரது மனைவி கீதா, மற்றொரு தம்பி நந்திவர்மன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அன்றைய தினம் மாலை 05.45 – 06.00 மணியளவில் எனது தம்பி ஞானசேகரனும், அவரது மனைவியும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, சர்ச் ஏரி அருகே சென்றபோது, ஆஜர் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து எனது தம்பி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது ஓரசுவது போல் வந்ததாக எனது தம்பியும், அவரது மனைவியும் என்னிடம் சொன்னார்கள்.

2. நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, சஞ்சய் அங்கு வந்தார். அவர் குடித்திருந்தது போல் தெரிந்தது. சஞ்சய் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை பார்த்துவிட்டு, என் தம்பியின் ஞானசேகரன் காலின் மீது கல்லை எடுத்து அடித்தார். அருகில் இருந்த கட்டையை எடுத்து வந்து என் தம்பி ஞானசேகரன் நெஞ்சின் மீது அடித்தார்.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:36:42 +0530

4. அதை நாங்கள் தடுக்க சென்றபோது நந்திவர்மன் என்பவரின் முதுகின் மீது சஞ்சய் கையால் அடித்துவிட்டார். பின்பு என் அ.சா.2 கீதாவின் முடியை எதிரி சஞ்சய் பிடித்து இழுத்து, அவர் அணிந்திருந்த சுடிதாரை இழுத்து கிழித்துவிட்டார். அங்கு சஞ்சய் மட்டும் தான் வந்தார். மற்ற எதிரிகள் வரவில்லை. அங்கு கைகலப்பு ஆகிவிட்டது. பின்பு எதிரி சஞ்சய் எனது தம்பி ஞானசேகரனை பார்த்து தேவிடியா பையா என்று திட்டினார். அதன்பின்பு எங்களை பார்த்து இன்று நீங்கள் தப்பித்து விட்டீர்கள். என்றைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சஞ்சய் சொன்னார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.12 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:36:45 +0530